கண்டுக்குளி சிறா நூலகம்

# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 118 இதழ் : 04 21-02-1992 ( பெப். 21 — மார்ச். 06 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50

### ஆயர் பேரவை

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் ஆயர்பேரவையின் மகாநாட்டின் 9வது பொது அமர்வுக்கான தலைப்பாக "உலகிலும் திருச்சபையிலும் அர்ப்பணித்த வாழ்வும் அதன் பங்கும்" என்ற தலைப்பை அறிவித்துள்ளார். இவ் அமர்வு அடுத்த ஆண்டு இடம்பெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கண்டத்தினதோ நாட்டினதோ எதிர்காலத்தை கட்டியெழுப்ப குண்டுகள் நிச்சயமாக ஒரு வழியாக அமையாது

# தாக்குதல்களாலும் எதிர்த்தாக்குதல்களாலும் இலங்கையர் பலர் பாதிப்பு — திருத்தந்தை

**இலங்கையில் ஆயிரக்கணக்கானவர்கள் தாக்குதல்களினாலும் எதிர்த்தாக்குதல்களினாலும் பாதிக்கப்பட்டு வேதனையுறுகிறார்கள் என சென்றமாதம் 11ஆம் திகதி வத்திக்கானில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களை திருந்தந்தை அழைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். தாங்கள் விரும்பும் வழியில் சிந்திக்கவும் வாழவும் வேண்டிய வழியைத் தெரிந்துகொள்ள மக்களுக்கு உரிமையுண்டு எனவும் திருத்தந்தை வலியுறுத்திக் கூறினார்.**

நாட்டின் எதிர்காலத்தைக் கட்டி எழுப்ப குண்டுகள் நிச்சயமாக ஒரு வழியல்ல என திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் சென்ற மாதம் 11ஆம் திகதி வத்திக்கானில் தம்மைச் சந்தித்த அங்குள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதர்களுக்கும் குறிப்பிட்டார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக குறோஏசியாவில் யுத்தத்தால், ஏற்பட்ட அனர்த்தங்களினால் ஆலயங்கள், வைத்தியசாலைகள் வதிவிடங்கள் குண்டுகளினால் அழிக்கப் பட்டமையைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை தமது உரையில்சிறப்பான கருத்தாக "தங்கள் வழியில் சிந்திக்கவும், வாழவும் தெரிந்துகொள்ள மக்களுக்குஉரிமையுண்டு" என்பதை வலியுறுத்திக் கூறினார்.

புதிதாக உருவாகும் அரசுகளின் உரிமைகளையே திருத்தந்தை குறிப்பாக சுட்டிக் காட்டினார்.

1991 இல் ஏற்பட்ட வளைகுடா யுத்தத்தால் ஈராக்கில் இன்னமும் மக்கள் துன்பப்படுவதுபற்றியும் வட அயர்லாந்து பிரச்சினை பற்றியும், ஆபிரிக்காவில் எத்தியோப்பியா, சோமாலியா, சூடான் பிரச்சினைகள் பற்றியும் குறிப்பிட்ட திருத்தந்தை தமக்கு வெகு தொலைவிலுள்ள இலங்கையில் தொடரும் வேதனைகள் பற்றி வெளிநாட்டு தூதர்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறினார்.

"இலங்கையில் ஆயிரக்கணக்கான மக்கள் தாக்குதல்களாலும், எதிர்த் தாக்குதல்களாலும் பாதிக்கப்பட்டு வேதனையுறுகிறார்கள் இந்த நிலைகளைப் ற்றி நாம் வாழாவிருந்துவிட முடியாது. சகோதரர்களை கொல்லும்போராட்டங்களை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகளை ஆதரிக்க அரசியல் தலைவர்களுக்கு முக்கிய கடமையுண்டு" என்றார்.

## பாலியல் பிரச்சினைகளில் இளைஞருக்கு உதவி

பிலிப்பைனிலுள்ள வாழ்வுக்கான இயக்கம் இளைஞரின் பாலியல் பிரச்சினைகளில் வழிகாட்டி வந்துள்ளது. இவ்வியக்கத்தின் பயிற்றுநரான மே பெல்ஜிகா என்பவர் இளைஞரின் பாலியல் பிரச்சினைகளுக்கு அறியாமையே பெரிதும் காரணமென்றும், முன்பு பெற்றோரிடமிருந்து இளைஞர் இவ்வறிவை பெற்றுக்கொண்டனரென்றும், இப்போது நவீனமயப்படுத்துதலால் வாழ்க்கை முறைகள் மாற, இளைஞரின் ஒழுக்கவளர்ச்சியை குடும்பம் பூர்த்திசெய்ய முடியாமலிருக்கிறதென்றும் கூறியுள்ளார்.

கல்வி, கலாசார, விளையாட்டுத் திணைக்களத்தால் விதிக்கப்படாதபோதிலும், உடற்கல்வி, சுகாதாரம் அல்லது சமய வகுப்புகளில் பாலியல் கல்வி கற்பிக்கப்படுகிறது. வாழ்வின் அர்த்தமும் மதிப்பும், இருபாலார் உறவு, கருத்தடை முதலியன எடுக்கப்படும் சில விடயங்களாகும்.

இளைஞர் பாலியலைப் பற்றித் தவறான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர். பால் என்பது ஒருவரது முழு ஆளுமை என்பதை மறந்து ஒரு சில செயல்களையே கருதுகின்றனர். தொலைக்காட்சி, சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்தே இத்தகைய கருத்து அவர்களிடம் உண்டானது என்று மே பெல்ஜிகா கூறுகிறார்.

## சீனாவில் நத்தார்-குருக்களுக்கு ஓர் அறைகூவல்

சீனாவில் நத்தார் தினம் குருக்களுக்கு ஓர் அறைகூவலாக எப்போதும் இருந்து வந்துள்ளது என ஜியாங்சூ மாநிலத்தைச் சேர்ந்த பிதா வியூயுவானரென் கூறியுள்ளார்.

அறுபது வயதான பிதா வியூவும் வேறு மூன்று குருக்களும் வுக்ஸி என்னும் கத்தோலிக்க மீன்பிடி கிராமத்தில் பணியாற்றுகிறார்கள். ஒவ்வொருவரும் நத்தாரன்று மூன்று திருப்பலிகள் ஒப்புக்கொடுத்தாலும் சமூகமளிக்கும் பெருந்தொகையான பக்தர்களுக்கு நற்கருணை கொடுப்பதிலே 45 நிமிடம் எடுக்கிறது என்றும் எல்லோரும் எல்லாத் திருப்பலிக்கும் வரவேண்டாம் என அடிக்கடி கூறவேண்டியிருக்கிறது என்றும் பிதா வியூ தெரிவித்தார்.

நெடுந்தூரங்களிலிருந்து வரும் மக்கள் ஆலய வளவிலேயே ஓரிருநாள் தங்கியிருந்து எல்லா வழிபாடுகளிலும் பங்குபற்ற முயல்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு இந்த வசதிகள் எப்போதும் கிடைப்பதில்லை. அவர்கள் தவறாது பங்குபற்றும் நாட்கள் நத்தார், உயிர்ப்புவிழா, பரிசுத்த ஆவியின் திருநாள், மாதாவின் விண்ணேற்பு ஆகியனவாகும். வருவோர் திருப்பலியில் பங்குபற்றுவது மட்டுமல்லாது பச்சாத்தாபம், உறுதிப்பூசுதல், நோயில் பூசுதல், மெய்விவாகம்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## பொது நிலை கல்வி வித்தகரின் மரணம்

இந்திய கத்தோலிக்க திருச்சபையின் தலைசிறந்த கல்வி வித்தகரில் ஒருவரான பேராசிரியர் திரு. வி. வி. ஜோண் கடந்த நவம்பர் மாதம் காலமானார். அவருக்கு வயது 81. இவர் ராஜஸ் தானிலுள்ள ஜோத்பூர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்தவர்.

திருத்தந்தையினால் 1989-ல் புனித கிரகோரியார் விருது அளித்துக் கௌரவிக்கப்பட்டவர்.

ஆளுநர், வெளிநாட்டுத் தூதுவர், இந்திய உப ஜனாதிபதி பதவிகளுக்கு அவரது பெயர் முன்வைக்கப்பட்டபோதிலும் அவற்றை ஏற்றுக்கொள்ள அவர் விரும்பவில்லை. மிகுந்த பக்திமானான இவர் தினசரி திருப்பலி காணும் வழக்கமுடையவர்.

## ஆயர் குலேந்திரன் காலமானார்

தென் இந்திய திருச்சபையின் யாழ்ப்பாண மறை மாவட்ட முதலாவது ஆயரான வண. டாக்டர் சபாபதி குலேந்திரன் கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாயில் காலமானார். அவருக்குவயது 91.

சமய நூல்களை எழுதியிருக்கும் தமிழ் அறிஞரான இவர் 1947 முதல் 1971 வரை ஆயராக இருந்தார். ஆயரின் மரணச் சடங்குகள் வட்டுக்கோட்டையில் கடந்த 17 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றது.

## அருள்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகள் கலாநிதி பட்டம் பெற்றார்



அருள்திரு. அன்ரன் மத்தாயஸ் அடிகள் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையில் "19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் யாழ்ப்பாணத் திருச்சபையும், சுவாமி ஞானப்பிரகாசியாரின் மறைப்பணியும்" என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு கலாநிதிப்பட்டம் பெற்றுள்ளார்.

பாதுகாவலன் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியராகப் பணியாற்றிய அருள்தந்தை அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ற முதலாவது கத்தோலிக்க குரு ஆவார்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம் கருத்து

## திருச்சபையின் குரல்

கிழக்கு ஐரோப்பிய மாற்றங்கள் இன்னமும் உலகின் பார்வையை ஈர்த்த வண்ணமாகவே இருக்கின்றன. திருச்சபையைப் பொறுத்தமட்டிலும் உலகளாவிய திருச்சபை கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களைக் கரிசனையோடு கண்ணோக்கி வருகின்றது.

ரஷ்யாவிலும், கிழக்கு ஐரோப்பாவின் மற்றைய பகுதிகளிலும் மத உணர்வு புத்துணர்ச்சி பெற்றுள்ளது. பொருளாதார நெருக்கடிகளும், இனங்களுக்கிடையிலான முறுகல் நிலைகளும் பெரும் பிரச்சனைகளாக இருக்கும் அதே வேளையில், பாரம்பரிய கிறிஸ்தவ சபைகளுக்கும் கத்தோலிக்க திருச்சபைக்கும் இடையில் ஒருமைப்பாட்டைக் கொண்டுவரும் முயற்சிகளும் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை.

மார்கழி மாத நடுப்பகுதியில் உரோமாபுரியில் நடைபெற்ற ஆயர்கள் பேரவையில் ஐந்து ஒத்தடொக்ஸ் திருச்சபைகளின் பிரதிநிதிகள் சமூகம் தராததால் இந்நிலை தெளிவானது. அங்கு கூடியிருந்த ஆயர்கள் உலகின் மாற்றங்களுக்கு திருச்சபை எவ்வாறு முகம் கொடுக்கவேண்டும் என்பது பற்றி விரிவாக ஆராய்ந்தனர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் அரசியல் பொருளாதார ரீதியாக இணைந்துகொண்டிருக்கின்றன. பொது நாணயம், பொது இராணுவம், பொது உள்ளூர் அரசியல் என்பவற்றை ஏற்படுத்தும் முயற்சிகளில் மேற்கு ஐரோப்பா முழு மூச்சுடன் செயற்பட்டு வருகிறது. சோவியத் யூனியனுக்கு சுதந்திரம் கொண்டுவர முயற்சிசெய்த சோவியத் ஜனாதிபதி மிஹாயில் கோர்பச்சோவ் பணியைத் திறம்பட ஆற்றி விலகிக் கொள்ளுகிறார். ரஷ்யாவின் புதிய தலைவராக யெல்ற்சின் நாளுக்கு நாள் முன்னிலைக்குத் தள்ளப்படுகிறார். இந்த சூழ்நிலையின் பின்னணியில் கத்தோலிக்க திருச்சபையின் ஆயர்கள் ஐரோப்பாவின் இரு பாகங்களையும் ஒன்றுசேர்க்கும் முயற்சியில் தானும் எதுவித குரலையேனும் கொடுக்க முடியுமா என கண்டுகொள்ள எத்தனித்தனர்.

உரோமையில் நடைபெற்ற ஆயர்பேரவையின் முடிவில் ஆயர்கள் வெளியிட்ட அறிக்கையில் கொம்யூனிசத்தின் வீழ்ச்சியைப் பாராட்டியதோடு திருச்சபை எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முட்டுக்கட்டைகளான மதப்பற்றின்மை, பொருள் குவிப்பு, சுதந்திரம்பற்றிய தப்பான கொள்கை என்பவற்றை சுட்டிக்காட்டினர். ஐரோப்பிய கண்டத்தில் நற்செய்தியைப் பரப்புவதற்கு செபம், எடுத்துக்காட்டான வாழ்வு, கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆகியன அவசியமென அழைப்பு விடுத்தனர்.

பேரவையில் சர்ச்சைக்குரிய விடயமாக அமைந்தது பாரம்பரியத் திருச்சபை (ஒத்தடொக்ஸ்) சமூகமளிக்காமை. இதுபற்றி ஐரோப்பிய கத்தோலிக்க ஆயர்கள் தமது அறிக்கையில் குறிப்பிடுகையில் ''நற்செய்தி போதிப்பதே எல்லா கிறிஸ்தவர்களுக்கும் உரிய பொதுவானபணி என நாம் உணருகிறோம், கிறிஸ்தவ ஒன்றிப்பினாலேயே அது கைகூட முடியும்'' என்றனர்.

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் ஆயர் பேரவையை முடித்துவைக்கையில், ''ஒன்றிப்புக்கான முயற்சியில் ஈடுபடும் ஐரோப்பாவில் பரபரப்பும், பயமும் கவலையும் குடி கொண்டிருக்கிறது. இந்நிலையில் திருச்சபை சமாதானத்தின் கருவியாகத் திகழ் முடியுமா? திருச்சபையானது ஒப்புரவைப் பகிர முடியுமா?'' என்ற வினாக்களை எழுப்பினார்.

ஆயர் பேரவை அறிக்கையானது தற்கால ஐரோப்பாவின் போக்கையிட்டு மிகவும் கரிசனையாக இருந்தது. கொம்யூனிசம் வீழ்ந்துவிட்டபோதிலும் அதன் தாக்கங்கள் மனித மனங்களில் ஆழமாக ஊன்றியுள்ளன. மேற்கில் பொருளாதார முன்னேற்றத்தால் உடன் ஆசைகளைப் பூர்த்திசெய்யும் சமூகம் பெருகிக்கொண்டே இருக்கிறது. இந்நிலையில் புதிய ஐரோப்பாவில் மனித மாண்பு, சிறுபான்மையினரை மதித்தல் போன்ற பண்புகளை வளர்க்க திருச்சபை வழிதேடி நிற்கிறது.

# கத்தோலிக்கர்

## தனித்துவத்தைக் காத்தல் வேண்டும்



**கத்தோலிக்க அரசியல் தலைவர்களுக்கு ஆயர் பேரவையின் அறிவுரை**

கொழும்புப் பேராயரும் இலங்கையின் ஆயர் பேரவைத் தலைவருமான பேரருட்திரு நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ அவர்கள் எமது நாட்டில் சமய சமரச குளறுபடி ஏற்படும் அபாயம்குறித்து கத்தோலிக்க அரசியல், சமூகத் தலைவர்களை எச்சரித்து, கத்தோலிக்க தனித்துவத்தையும், தமது விசுவாசத்தையும் காக்கும்படி அறிவுறுத்தியுள்ளார். அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர் போன்ற பதவிகளை வகிக்கும் கத்தோலிக்கருக்கு ஆயர் பேரவையினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தல் பின்வருமாறு.

கத்தோலிக்க தலைவர்களே,

கடந்த காலத்திலும் முக்கியமாக அண்மைக்காலத்திலும் எமது நாட்டில் சமயசமரச குளறுபடிகள் ஏற்படும் அபாயம் குறித்துக் கலக்கமடைந்துள்ளோம். பொது வைபவங்களிலும், பிற மத சமயவழிபாடுகளிலும், கத்தோலிக்க அரசியல் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், சாதாரண விசுவாசிகள் ஆகியோர் எவ்வாறு நடந்துகொள்வது என்பதுபற்றி சில ஒழுங்குவிதிகளை வகுத்துத் தருமாறு எமது கத்தோலிக்க மக்கள் பலர் ஆயர்களாகிய எம்மை வேண்டியுள்ளனர்.

இவ்விடயத்தை பல்வேறு மட்டங்களில் ஆராய்ந்த பின்னர் நாம் பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளோம். நாம் உங்களுக்கு அளிக்கும் இந்த விதிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுதல் வேண்டும். ஏனெனில் எமது நாட்டில் சமய நட்புறவையும், புரிந்துணர்வையும் வளர்க்கத் துணைபுரியும் அதேவேளையில் எமது கத்தோலிக்க தனித்துவத்தைப் பேணி, எமது விசுவாசத்தையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

1. பிறமத வழிபாட்டிடங்களில் மலர்கள், தூபம்போன்றவற்றைக் காணிக்கை செலுத்தும் வழிபாட்டுச் செயல்களையும், பிறமத சின்னங்களை அணிதல் முதலிய மதசார்பான செயல்களையும் கத்தோலிக்கர் தவிர்க்கவேண்டும்.

2. ஒரு கத்தோலிக்கர் தமது பதவி அல்லது சமூகநிலை காரணமாக, பிறிதொரு மதத்தினரின் சமய வைபவங்களிற் சமுகமளிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் கத்தோலிக்கர் அவ்வழிபாட்டில் பங்குகொள்ளாது, எல்லாச் சமயங்களுக்குமுரிய மதிப்புடன் செயலற்ற ஒரு நிலையில் இருப்பதே முறையாகும்.

இது தொடர்பான, பொதுக் கட்டளையொன்று வேண்டிய மற்றொரு விடயம், அரச வைபவங்களின்போது அல்லது சில அரசியல்வாதிகள் தொடர்பாக ஒழுங்குசெய்யப்படும் கத்தோலிக்க வழிபாடுகளாகும். இங்கு கத்தோலிக்க அரசியல்வாதிகள், பிறமத அரசியல்வாதிகள் என்றும், நாட்டின் தலைவர், பிறர் என்றும் நாம் பாகுபடுத்த வேண்டியிருக்கிறது. இந்தப் பாகுபாடுகளைச் செய்தபின் பின்வரும் பணிப்புரைகளைத் தருகிறோம்.

1. திருச்சபையின் ஏனைய உறுப்பினரைப் போன்றே தமக்கு விசேடமான தினங்களில் தமது கருத்துக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுக்கச் செய்யும் உரிமை கத்தோலிக்க அரசியல்வாதிகளுக்கும் உண்டு. ஆயினும் வேதாகம வழிபாடு அல்லது ஆசீர்வாத வழிபாடு போன்ற பிறசடங்குகளுக்கே இங்கு கூடிய இடம் அளிக்க வேண்டும். திருச்சபையின் அதியுன்னத செயற்பாடான திருப்பலி கிறிஸ்தவ சமுதாயத்துக்கே பிரத்தியேகமாக வைத்து, துஷ்பிரயோகம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களிலிருந்து அதை விலக்குவதே இதன் நோக்கமாகும். இத்தகைய சந்தர்ப்பங்களிலெல்லாம் அரசியல் பிரசாரத்துக்காகவோ இலாபத்துக்காகவோ இச்சமயச் சடங்குகள் பயன்படுத்தப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

2. பிறமதத்தினரைப் பொறுத்தமட்டில், அவர்களுக்காக எந்தக் கத்தோலிக்க திருச்சடங்கும் பகிரங்கமாக நிறைவேற்ற முடியாது. ஆனால் அவர்கள் தனிப்பட்ட விதத்தில் ஒரு குருவிடம் ஆசீர்வாதத்தையோ செபத்தையோ கேட்கலாம்.

3. நாட்டின் தலைவருக்கென ஒரு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவருக்காக கத்தோலிக்க பாரம்பரியத்தின்படியும், எமது நாட்டில் சமய நட்புறவைப் பேணும்பொருட்டும் வேதாகம வழிபாடு அல்லது ஆசீர்வாத வழிபாடு நடத்தப்படலாம்.

## உயிரிலும் மேலான அன்பு (குறுங்கதை)

அன்றைய காலைப் பொழுது அமைதியாக விடிகின்ற அவ்வேளை பாயிலே சுருண்டு படுத்திருந்த டினேஸ் வழக்கம்போல் தனிமையில் உதவியற்றிருக்கும் தனது வயதான பெரியம்மாவிற்கு உதவி செய்யப்புறப்பட்டான். ''ஐயையோ இன்று பொழுது நன்றாகவே விடிந்துவிட்டது. அங்கு சென்று திரும்பி பாடசாலைக்குச் செல்ல வேண்டும்'' என்று கூறிக்கொண்டு அவசர அவசரமாக விரைந்து சென்றான்.

பெரியம்மாவின் வீடு நகரத்தின் மத்தியில்தான் இருக்கின்றது. வீதியின் முடக்கில் திரும்பியிருப்பான் ''டோம்'' என்ற பெருஞ்சத்தமும், அதனைத் தொடர்ந்து வந்த துப்பாக்கி வேட்டுக்களும் அவனை நிலை குலையச் செய்தன! எங்கு ஓடுவது என்று தெரியாத வண்ணம் மக்களோ வீதியில் நாலாபுறமும் சிதறி சின்னாபின்னமாக ஓடினார்கள். அவனோ ஓடுவதை நிறுத்தி, வீதியின் ஓரமாக உள்ள மணல் தரையிலே குப்புற விழுந்து படுத்தான். நிமிடங்கள் மணித்தியாலங்களாக கரைகின்றன. ஆனால் துப்பாக்கி வேட்டுக்களோ நிற்பதாக இல்லை. துப்பாக்கி வேட்டின் சத்தத்திற்கு மேலாக யாரோ ஒருவரின் அவல ஒலியின் ஓசை அவன் காதுகளைத் துளைத்தது. தன் தலையை நிமிர்த்தி ஒரு கணம் பார்க்கத் துடித்தான். ஆனால் துப்பாக்கிச் சன்னங்களின் சமர் அவனை விடுவதாக இல்லை. மீண்டும குப்புறப்படுத்துக் கொண்டான். அந்தக் குரலுக்குரியவர் யாரோ!! அவரைப்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

## நற்செய்தியாளருக்குப் பயிற்சி

மலேசியாவிலுள்ள சபா மறைமாவட்டத்தில், சபா, சரவாக், புருனேய், மேலகா ஆகிய இடங்களிலிருந்து எண்பது பேர் கலந்துகொண்ட நற்செய்திப் பணியாளர் பயிற்சியொன்று கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்றது. அருங்கொடை இயக்கத்தினால் நடத்தப்படும் இந்தப் பயிற்சியில் உரையாற்றிய பம்பாயைச் சேர்ந்த பிதா றூபஸ் பெரேரா சபா மாநிலத்தில் நற்செய்திப் பணி இவ்வளவு வளர்ச்சியடைந்ததையிட்டு ஆச்சரியம் தெரிவித்தார்.

பயிற்சியின் கடைசி இரண்டு நாட்களிலும் பங்குபற்றியோர் வீதிகளிலும், சந்தைகளிலும் நற்செய்திப்பணிபுரிய அனுப்பப்பட்டனர். பேராலயத்தில் நடத்தப்பட்ட ஓர் விசுவாசப் பேரணி பயிற்சியின் உச்சகட்டமாக அமைந்தது.

வீட்டுக்கொரு பாதுகாவலன் · உங்கள்பங்கில் நடைமுறைப்படுத்துங்கள்

# 1990களை நோக்கி.......

## தூரத்துப்பார்வை அமதிகள் மாநாடு

இப்பகுதியில் வெளியாகும் கருத்துக்கள் சிந்தனைகளுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.

கரவையூர்ச்செல்வம்

(11)

**மாநாட்டின் முந்துரிமைகள்**

மாநாடு நடத்த வேண்டுமென்று வாக்கெடுப்பின் மூலம் முடிவு செய்த யாழ் அமதிகள், சித்திரை 1989 இல் நடைபெற்ற மாநாடு ஆயத்தக் கருத்தரங்கில் தங்களுடைய முக்கிய தேவைகளை வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுத்தார்கள்.

(1) தொடர் (அல்லது படிமுறை) உருவாக்கம் (Ongoing Formation)

(2) சிறப்புப் பணிகள் (Specialized Ministries)

(3) இறைவார்த்தை எடுத்தியம்பும் பணி (Preaching missions and retreats)

(4) துறவறக் குழு வாழ்வு (Religious community life) என்று நான்கு முக்கிய துறைகளை முதன் முந்துரிமைகளாகக் (top priorities) கோடிட்டுக் காட்டினார்கள், யாழ் அமதிகள். ஆழமாக இவற்றைப் பார்க்கும் பொழுது அதுவும் யாழ் அமதிகளின் இன்றைய சூழலில் வைத்துப் பார்க்கும் பொழுது இவை (முந்துரிமைகள் பொருத்தமானவையாகவே தோன்றுகின்றன. இவற்றை விளக்கும் பொழுது இக் கூற்றின் அர்த்தம் தானாகவே புலனாகும்.

**(1) தொடர் உருவாக்கல்**

பானையில் இருந்தால்தான் அகப்பையில் வருமென்பார்கள். ஒருவரிடம் இல்லாத ஒன்றை இன்னொருவருக்குக் கொடுக்க முடியுமா?

''பணி, பணி'' என்று அலைந்து இறுதியில் ''வேலை, வேலை'' என்று மூழ்கிவிடும் பல குருக்கள் / துறவிகள் இறுதியில் வேலைக்கு அடிமைகளாகிவிடுகிறார்கள் (workaholics). இதனால், பணிக்குரிய அன்பு, ஆதரவு கருணை போன்ற உயர் பண்புகள் இயல்பாகவே குன்றிக்குறைந்துவிடுகின்றன. நாளடைவில் தாம் செய்யும் பணிகளில் மட்டுமன்றி, தங்கள் வாழ்க்கையிலேயே இவர்கள் ஒரு விரக்தியும் வெறுப்பும் கொள்ளக்கூடும். வாழ்க்கையில் ஒரு பிடிப்பின்மையும், பணியில் ஓர் எரிச்சல் தன்மையும் இவர்களிடையே உருவாக இடமுண்டு. இந்த நிலையைத்தான் ஆங்கிலத்தில் "burn out" என்று குறிப்பிடுகிறார்கள். அதாவது காலத்திற்கு முன்னரேயே வாழ்க்கையில் ஓர் எரிந்துவிட்ட நிலையை அனுபவிப்பதாகும். குருத்துவ /

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

## குருசு முத்தண்ணையின் கிசு கிசு - 72

குருசு: என்ன அன்னம்? வீட்டில எல்லோரும் இருந்தும் நடக்கிற காரியத்தை தள்ளிப் போட்டுக் கொண்டு எதையோ எதிர்பாத்திருக்கிறியள் போல.

அன்னம்: எதையண்ணை செய்ய மனம் வருகுது, பத்து, பதினைஞ்சு, இருபது எண்டு நாட்டுப் பிரச்சனை தவணை போடிப் போட எப்ப தொடங்குமோ? எங்க ஓடுவம்? எண்டு இருக்கிறதால எல்லாத்தையும் தள்ளிப்போட்டு இந்த அழிவை எல்லோ எதிர்பார்த்திருக்கிறம் நாங்கள்.

குருசு: இது என்ன இப்பவோ... எத்தினை வருஷமா நடக்குது? இதுக்கெல்லாம் என்ன காரணம்? எதையோ எதிர்பார்த்து இருக்கிறியள். எண்டு அப்பவே சொன்னது மனதில இல்லையே, திருடன் வருவது போல இறைவனும் எப்ப வருவார் எண்டு தெரியாது. அதுக்கு ஆயத்தமா இருந்தியளே? அதில்லை, இப்ப அழிவைக் கண்டு எதையும் செய்யாது அதுக்கு ஆயத்தப்படுத்துறியள், நல்ல மனம் உள்ளவன் எதுக்கும் எப்பவும் ஆயத்தமாய் இருப்பான் பிள்ளை......

## உயிரிலும்.........

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

போய்ப் பார்க்க வேண்டும், அவருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற ஆவல் அவனைத் தூண்டியது. அவன் இதயத்தை முள்ளாகக் குத்தியது.

முதல் நாள் வகுப்பில் ஆசிரியர் வாசித்து விளக்கம் தந்த பைபிள் வசனமான ''ஒருவன் தன் நண்பனுக்காகத் தன் உயிரைக் கொடுப்பதிலும் மேலான அன்பு வேறெதுவும் இல்லை'' என்று கூறிய வாக்கியம் அவன் நினைவிற்கு வந்தது. பரிசுத்த ஆவியின் கொடையைப் பெற்ற அப்போஸ்தலரிடம் கொண்டது, போல் எவ் ஆபத்தையும் எதிர் கொள்ளும் மனோதிடம் டினேஸிற்கு தென்பைக் கொடுத்தது. அங்கிருந்து எழுந்து சென்று இரத்த வெள்ளத்தில் உயிரிற்கு ஊசலாடும் பெரியவரைத் தூக்கினான். அவனின் கை கால்கள் பதறிய வண்ணம் பெரியவரின் முகத்தைப்பார்த்து திகைத்துப் போனவன் ''சார்'' என்று தன்னிலை மறந்தவனாகக் கத்தினான். அது அவனின் பாடசாலை ஆசிரியர் தான். சன்னம் துளைத்த அவரின் உடலிலிருந்து இரத்தம் ஆறாய் ஓடுகின்றது. டினேஸின் பிஞ்சு உள்ளம் துடியாய்த்துடித்தது. என்ன செய்வதென்று அவனிற்குப் புரியவுமில்லை, தெரியவுமில்லை.

தனது மேற்சட்டையைக் கிழித்து காயத்தில் அழுத்திக் கட்டினான். அந்த இக்கட்டான நேரத்தில் அவனிற்குத் தெரிந்த முதலுதவி அதுதான். மெல்ல ஊர்ந்து, வீதியைக் கடந்து அயல் வீட்டுக் கதவைத் திறந்து விட்டு பின் மெல்ல மெல்ல ஆசிரியரைத் தூக்கி கதவருகே வந்திருப்பான், எங்கிருந்தோ வந்த துப்பாக்கிச் சன்னம் அவன் உடலையும் பதம் பார்த்தது. வீட்டு வாசலிலே ஆசிரியரின் அருகே கிடந்தவன் ''காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்'' என்று கத்தியவாறு தானும் தரையிலே சரிந்தான். சிறுவனின் உடல் துப்பாக்கிக் குண்டைத் தாங்காததால் கண்கள் மெல்ல மங்குகின்றன. அந்த மங்கலான ஒளியிலும் அவனிற்குப் புரிகின்றது. அவ்வீட்டார் நிச்சயம் ஆசிரியரைக் காப்பாற்றுவார்கள் என்று. 'அறிவில்லாத ஆயுதம் அரசாட்சி செய்கிறது. சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் தேவையான ஓர் ஆசிரியரை அழிவிற்கு இட்டுச் செல்லத் துடிக்கின்றதே, இந்த நிலை மாறாதா?'...... என்ற ஏக்கத்துடனும், எல்லோர்க்கும் உரிய ஆசிரியரின் உயிரை நான் காப்பாற்றி விட்டேன். என்ற ஆனந்தத்தின் அக்களிப்பிலும், டினேசின் உயிர் உலகை விட்டுப் பிரியாவிடை பெற்றது.

மறை ஆசிரியர்
ஞானப்பிரகாசம் ஜொய்சிலி றமி
புனித ஆரோக்கியநாதர்
பாடகர்குழாம்

# காவலன் கண்மணிகள்

| | | |
|---|---|---|
| ஒளி : | 6 | எம் விழிகளின் ஒளி யேசு |
| கூடர்: | 4 | எம் வாழ்வின் வழி யேசு |

**என்னகம் : 4**

அன்புக்கினிய கண்மணிகாள்!

குழந்தை யேசுவின் ஆசியும் அருளும் உங்களோடு இருப்பதாக.

வீட்டிலும், கல்விக்கூடத்திலும், வீதியால் செல்லும்போதும் பலரின் வாய்கள் அசைவதைக் கவனித்தீர்களா? ; ஏன் உங்கள் சிலரின் வாய்களும் கூட அசையலாம்.

வாய்களை அசையவைக்கும் அந்தப் பொருள் எது?

துவிச்சக்கர வண்டியில் செல்லும் போது கூட வாயில் ஒரு குமிழி செய்து, மணிக்கணக்கில் சப்பித்துப்பும் அந்தப் பொருள் எது?

'BUBBLE GUM' என்று ஆசையோடு வாங்கிச் சப்பும் எங்களுக்கு அது தெரியாதா? என்று உங்கள் உள்ளம் உரைப்பது எனக்குப் புரிகிறது.

BUBBLE என்றால் குமிழி.

GUM என்றால் ஒட்டும் தன்மையுடைய பொருள்; முரசு இதைச் சப்புவதால் வரும் தீமைகளைப்பற்றி உங்கள் பெற்றோர், ஆசிரியர், வைத்தியர் அறிவுறுத்தி வருகின்றனர்.

எங்கள் உடல் நலத்தை மட்டுமல்ல, உள நலத்தையும் பொருள் வளத்தையும் இந்தக் குமிழி பாதிக்கிறது.

உங்கள் உளப்பலத்தால் சப்பித்துப்பும் இந்த குமிழியை விட்டு விட்டு, நல்லவை உண்டு நலமுடன் வாழும் நற்பழக்கந்தர இயேசுவிடம் வேண்டும்.

அன்பின்
அன்பு விழி.

பாடிப்பாருங்கள் (சென்ற வாரத் தொடர்ச்சி)

## ஒரு குழந்தைக் கதை இது

ஆண்டவனைத் தாங்கி அவள்
தன் மைத்துனி வீட்டுக்குச் சென்றாளாம்
அக்கன்னி வாழ்த்தைக் கேட்டதுமே
மச்சாள் குழந்தை கருவினிலே
அக்களிப்பால் துள்ளிற்றாம்
பத்து மாதம் சென்றிடவே
பாங்காய் ஒரு பாலகனும்
கன்னுக் குட்டிக் குடிலிலே
மின்னும் ஒளியாய்ப் பிறந்தாராம்
பால யேசுவைப் பார்த்திடவே
வான தூதர் குழாங்களும்
ஆடு மேய்க்கும் ஆயரும்
ஆர்ப்பரித்து வந்தனராம் ஆராதித்துச் சென்றனராம்
கீழ்த் திசையிலிருந்தொரு விண்மீனும்
மேற்கே நகர்ந்து வந்ததுவாம்
மூவரசர் கண்டதனைப் பின் தொடர்ந்து வந்தனராம்
முத்தி செய்து சென்றனராம்
நாமும் போவோம் வாருங்கோ
இறைவனவன் குவாக்குவாக் குடிலுக்கே!

பா. ஜரா காமலிந்றா
அங். எ. A 45

## யார் இவர்?

இவர் புனித ஆசீர்வாதப்பரின் தங்கை. இளம் வயதிலேயே தன்னை இறைவனுக்கு அர்ப்பணித்தவள் ஒருதுறவற சபையை நிறுவி பல கன்னியரைச் சேர்த்து இறை தொண்டு புரிந்தவள். நோய்க்குள்ளாகி இருந்தபோது தன்னைக்காண வந்த தன் அண்ணனுடன் ஞானக்காரியம் பற்றியே உரையாடியபோது, தனது மரண நேரம் அடுத்திருப்பதை அறிந்து கொண்டாள். அதனால் புனிதரை இரவு தங்கி தன்னுடன் ஞானக் காரியங்களைப் பற்றிப் பேச ஆசித்தாள்; ஆனால் அண்ணனோ சபையின் ஒழுங்குக்கு மாறாக நடக்க விரும்பாது புறப்பட்டார். புனிதை மனம் வருந்திச் செபித்தார். உடனே பெரும் மழையும் காற்றும் புனித ஆசீர்வாதப்பரைத் தடுத்து ஞானக் காரியங்களைப் பற்றிப் பேசும் சந்தர்ப்பத்தைக் கொடுத்தது மூன்றாம் நாள் அப்புனிதை இறையடி சேர்ந்தார். அவரது ஆத்துமம் புறாவடிவமாக விண்ணகம் சென்றதை புனித ஆசீர்வாதப்பர் கண்டார். இவ்விரு சம்பவங்களையும் திருந்தந்தை புனித கிரகோரியார் எழுத்துவடிவில் நமக்குக் கொடுத்துள்ளார். இப்புனிதையின் வரலாற்று ஆண்டு 480–542 ஆகும்.

பாதுகாவலன்
PATHUKAVALAN

## அ. ம. திகள் மகாநாடு

(3ஆம் பக்கத்தொடர்ச்சி)

துறவற உருவாக்கம் இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் பின்னணியிலும், 60 களில் ஏற்பட்ட உளவளப்புரட்சியின் பின்னணியிலும் ஆய்வுக்குள்ளாகியது. இதன் விளைவாக ஓர் ஆரோக்கியமான ஒருங்கிணைந்த (integrated) உருவாக்கந்தான் 90களுக்கு தேவையென வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அதாவது அறிவியல் ரீதியான வளர்ச்சி மட்டும் போதாது, அத்துடன் உணர்வியல் ரீதியானதும் ஆன்மீக ரீதியானதுமான வளர்ச்சி வேண்டும் என்று உருவாக்கப் பணியில் ஈடுபட்டோர் கோடிட்டுக் காட்டுகின்றனர். அறிவு (cognitive) உணர்வு (affective), ஆன்மீகம் (spirituality) ஆகிய மூன்றும் மனிதரில் இயல்பாக உள்ளன. இவற்றைத் தனித்தனியாக வளர்ப்பதோ, அன்றேல் ஒன்றைப்புதைத்து மற்றொன்றை வளர்ப்பதோ முழுமையான வளர்ச்சியாகாது. நாம் முழுமனிதர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். அனைத்து மக்களுக்கும் உள்ள ஓர் உள்ளார்ந்த அழைப்பு (an inner call), இது.

ஒருங்கிணைந்த உருவாக்கம் குருத்துவக் கல்லூரியுடன் அன்றல் நித்தியம் செய்தவுடன் முடிவடைவதில்லை. இது ஒரு தொடர் வளர்ச்சியாகையினால் இவ் வளர்ச்சி வாழ்க்கை பூராக நடைபெறவேண்டும். இறுதிமட்டாக நாம் கேட்கும் (நிதானமாக நின்று ஆழமாகக் கேட்பவர்களுக்கு) ஓர் உள்ளார்ந்த அழைப்பு, இது. ஆகவே, திருநிலைப்படுத்தப்பட்டமையினால் அன்றேல் நித்தியம் செய்த காரணத்தினால் நாம் உருவாக்கப் பட்டுவிட்டோம் என்ற நினைப்பு, அன்றேல் எதிர்பார்ப்பு தவறானது; மனிதர்களின் உள்ளார்ந்த தொடர்ச்சியான அழைப்பிற்கு (ongoing call) முரணானது. இவற்றையிட்டுப் பின்னர் விரிவாக எழுதுவோம்.

90களுக்கு இப்படிப்பட்ட தொடர் உருவாக்கம் மிக அவசியமென இன்று திருச்சபையில் வலியுறுத்தப்பட்டுவருகின்றது. பல துறவற சபைகள் தொடர் உருவாக்கத்தை அவசியமெனக் கருதி செயற்பட்டு வருகின்றன. தொடர் உருவாககம் (ongoing formation) தொடர் கல்வி (continued education) அல்ல என்பது இவ்விடத்தை தெளிவுறக் கூறப்படவேண்டும். தொடர் உருவாக்கம் தொடர்க் கல்வியாக அமையலாம், ஆனால், தொடர்க் கல்வியெல்லாம் தொடர் உருவாக்கமன்று.

ஒருங்கிணைந்த மனித வளர்ச்சியினின்று வழிந்தோடுவது தான் எமது பணியாக மலரவேண்டும். ''நாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற புறநானூற்றுக் கூற்றின் தத்துவமே இது தானே? ஆகவே, எமது பணி நாம் பெற்ற அறிவில் இருந்தோ அன்றேல் நாம் பெற்ற செய்தியின் சேர்க்கையிலிருந்தோ வருவதைவிட எமது ஒருங்கிணைந்த வளர்ச்சியினின்று வழிவதே சிறப்பாகும், அதுவே சிறந்த அர்த்தமுள்ள பணியுமாகும்.

(வளரும்)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி
அந்தோனியாப்பிள்ளை
அந்தோனிப்பிள்ளை



மலர்வு 26-08-1906
உதிர்வு 23-01-1992

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (அரு. 11 25)

கண்ணயரா தருகிருந்து கண்
இமைபோல்-எமைக்காத்த
பெண்ணரசே! தாயே
பேரன்பின் உறைவிடமே!
விண்ணருகே போனாலும்
எமைவிட்டுச்சென்றாலும்
எம்மருகே தான் நின்று எமை என்றும் காத்திடம்மா!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நவாலி சென் பீற்றேஸ் ஆலயத்தில் 22-02-1992 சனி மாலை 4-00மணிக்கு இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்புக்கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
நவாலி தெற்கு, மானிப்பாய். A/7/92

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81

## ஆசிரியர்மீது குற்றச்சாட்டு

நாகாநகரிலுள்ள கத்தோலிக்க பல்கலைக்கழகமொன்றின் பேராசிரியரான றெபேக்கா டொறேஸ் பயங்கரவாதக் குற்றச்சாட்டின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் ஒரு டாக்ஸியில் பல்கலைக்கழகத்துக்கு சென்றுகொண்டிருக்கும்போதே கைது செய்யப்பட்டார். பின்னர் தான் யாரென்பதற்கு ஆதாரம் காட்டியபோது பல்கலைக்கழக அதிபருக்கும் தனது வழக்கறிஞருக்கும் தொலைபேசி மூலம் விபரம் தெரிவிக்க அனுமதிக்கப்பட்டார்.

1987இல் ஒரு இராணுவ அதிகாரியின் கொலைக்குக் காரணமாயிருந்த றெபேக்கா டிலாகுருஸ் என்பவரைப் பற்றிக் கிடைத்த தகவலின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டார் ஆனால் ஒரே பெயரைக் கொண்டிருந்த போதிலும் இவர்களிருவரும் வேறு வேறு ஆட்களென்பது விசாரணையில் நிரூபிக்கப்பட்டது. பேராசிரியர் நாகா நகரில் நிரந்தரமாக வசித்தவராதலால் கொலைச்சம்பவத்தில் அவருக்கு சம்பந்தம் இருக்க முடியாது என்று அவர் தரப்பில் விவாதிக்கப்பட்டது ஈற்றில் அவர் நான்கு நாட்களின் பின் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

கலாநிதிப் பட்டத்துக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் றெபேக்கா டொறேஸ், இந்த வழக்கு முடிந்து தான் குற்றமற்றவரென தீர்மானிக்கப்படும் வரை தனது படிப்பைக் கைவிட வேண்டியது தான் எனக் கூறினார்.

## பிரான்சிஸ்கன் சபையினரில் "படைப்பின் ஆன்மீகம்"

பிலிப்பைனிலுள்ள பிரான்ஸிஸ்கன் சபையார் ''படைப்பின் ஆன்மீகம்'' என்னும் ஒரு புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளனர் உயிரின வாழ்க்கைச் சூழல், திருவழிபாடு, பணி, கலை என்பன இதனுள் அடங்கும். சமயமும் படைப்பும், ஆசிய சமயங்களும் படைப்பு ஆன்மீகத்துக்கு அவற்றின் பங்களிப்பும் முதலியன அடங்கிய கற்கை நெறியில், உயிரின வாழ்க்கைச் சூழல் தொடர்பான திருவழிபாட்டுக் கேற்ற புதிய பாடல்கள், செபங்கள், பக்திமுயற்சிகள், சடங்குகள் அமைக்கப்படுகின்றன.

பங்குகளிலும் பாடசாலைகளிலும், சூழல் உணர்வையும் சூழல் பாதுகாப்பையும் பேணுவதற்கு கலையும், கலாச்சாரமும் பயன்படுத்தப்படும்.

படைப்பைப் பாதுகாப்பதற்கான நிறுவனம் குவெசன் நகரில் நடத்திய ஆய்வரங்கொன்றில்பேசிய அருட்செல்வி றோசாறியோ பட்டுங் படைப்புகளெல்லாம் ஒன்றோடொன்று இணைவுற்றவை என்றும், இது குழு, சமூகம், உலகு சார்ந்த உறவுகளை குறிப்பாகச் சுட்டுகிறது என்றும் கூறினார்.

1987இல் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனமானது புனித பிரான்ஸிஸ் அசீசியாரின் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டது.

## 25 ஆண்டுகளின் பின் புதிய ஆயர்

வடமேற்கு சீனாவிலுள்ள ஷான்சி மாநிலத்தில் இருக்கும் யானான் மறைமாவட்டம் 25 ஆண்டுகள் காலியாக இருந்த பின் கடந்த நவம்பர் 17ஆம் திகதி ஒரு புதிய ஆயரைப் பெற்றது. 77வயதான ஆயர் ஜோசவ் வாங் சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் யானான் ஆயராகத் தெரியப்பட்டார். அவரது திருநிலைப்பாட்டின் போது சுமார் 1000 கத்தோலிக்கர் சமூகமாயிருந்தனர்.

ஆயர் வாங் 1943இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1980 முதல் அவர் சியான் பிராந்திய குருமடத்தில் விரிவுரையாற்றி வந்தார். இதயநோயினால் பாதிக்கப்பட்ட இவர் உடல்நிலை தேறியதும் தமது மறைமாவட்டத்துக்குத் திரும்புவார்.

இம் மறைமாவட்டத்தில் ஏறக்குறைய 40,000 கத்தோலிக்கர் இருந்தாலும் இவர்கள் நெடுந்தொலைவிலுள்ள கிராமங்களிலேயே பெரும்பாலும் வசிக்கிறார்கள்.

## இரக்கக் கொலைக்கு மாறாக இரக்கப்பணி

நோயாளர் இல்லங்கள் குறித்த மகாநாடொன்று கடந்த நவம்பர் மாதம் பம்பாயில் நடந்தபோது 13 நாடுகளிலிருந்து 300 பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர்.

திருச்சிலுவைக் கன்னியரால் பம்பாயில் நடத்தப்படும் புற்றுநோயாளர் இல்லமாகிய சாந்தி அவேதனா ஆச்சிரமத்தில் இம் மகாநாடு நடைபெற்றது. பல்வேறு நாடுகளிலுள்ள வைத்தியர்களும், தாதியரும் நோயாளர் மட்டில் மாத்திரமல்ல, மரிப்போர் மட்டிலும் தமக்குக் கடமை உண்டு என்பதை உணர்ந்துள்ளமை உலகில் இத்தகைய நோயாளர் இல்லங்கள் இயக்கம் பரவுவதற்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

பிரதம உரையாற்றிய லண்டன் புனித கிறிஸ்தோபர் இல்லத்தைச் சேர்ந்த டாக்டர் மேரிபேயின்ஸ் 1000 ஆண்டுகளுக்கு முன் யாத்திரையாளர்களைப் பராமரிப்பதற்காக ஐரோப்பாவில் சந்நியாசமடங்கள் நடத்தி வந்த ஆதுலர் சாலைகள் முதல் இந்த இல்லங்களின் வரலாற்றை எடுத்துக் கூறினார். ஆனால் நவீன நோயாளர் இல்ல இயக்கமானது 1940இல் லண்டனில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பல நாடுகளில் பரவியுள்ளது.

50 கட்டில்களைக் கொண்ட சாந்தி அவேதனா ஆச்சிரமம் மாறாப் புற்றுநோயாளரை அன்புடனும் கரிசனையுடனும் பராமரித்துவரும் இல்லமாகும்.

## கத். எழுந்தாளருக்கு ஐரோப்பிய விருது

ஜப்பானைச் சேர்ந்த 70 வயதான இனுகாய் மிச்சிகோ என்னும் எழுத்தாளர் தமது மனிதாபிமானச் செயல்களுக்காக ஐரோப்பிய சமூகம், யூனெஸ்கோ, ஐரோப்பிய கலை, விஞ்ஞான பண்பாட்டு நிறுவனம் ஆகியவற்றால் கௌரவிக்கப்படவிருக்கிறார். முன்னாள் பிரதமர் ஒருவரின் பேர்த்தியாகிய இவர் வேதாகமத்தையும், கிறிஸ்துவத்தையும் பற்றி பல நூல்கள் எழுதியுள்ளார். அத்துடன் அவர் பல சமூகப்பிரச்சினைகளிலும் ஈடுபாடு கொண்டிருக்கிறார்.

தமது வீட்டை விற்ற பணத்தையும், தமது புத்தகங்களால் வரும் வருமானத்தையும் கொண்டு 1987இல் இனுகாய் நிதியத்தை அவர் ஏற்படுத்தினார். மொசாம்பிக்கிலுள்ள ஆசிய அகதிகளுக்கும், அநாதைகளுக்கும் கல்வியறிவு வழங்குவதே அதன் நோக்கமாகும்.

தற்போது பிரான்ஸில் வசித்துவரும் இனுகாய் அகதிகள் சுதந்திரமாக வாழச் சந்தர்ப்பம் அளிப்பதற்கும், அவர்கள் உலகில் பயனுற வாழ்வதற்குப் பயிற்றுவதற்கும் தாம் விரும்புவதாகக் கூறினார்.

## சீனாவில்.. ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய திருவருட்சாதனங்களையும் பெற்றுக்கொள்வதால் குருக்களுக்கு இந்நாட்களில் வேலைப்பளு அதிகமாக இருக்கிறது.

சீனாவில் நத்தாருக்குப் பொது விடுமுறை இல்லை. ஆகவே போக்குவரத்து நிற்பதற்குமுன் வீடு செல்வதற்காக பல இடங்களில் 10 மணிக்கே நள்ளிரவுப் பூசை ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**